புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு ச.ஞானம், M.Sc., M.Ed.,

ந.க.எண்.ப2/0316/2025 நாள்:20 .01.2025

ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
25 JAN 2025
ஆவுடையார்கோவில்

பொருள்: பணியமைப்பு- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு- புதுக்கோட்டை மாவட்டம்- இளநிலை உதவியாளர்/ ஊர்நல அலுவலர் நிலை-2/ காசாளர் மற்றும் தட்டச்சர் பணிநிலையில 01.01.2025ஆம் ஆண்டிறகான தறகாலிக முதுநிலை வரைந்து வெளியிடல்.

பார்வை: 1.புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.3401/2024/ப2 (வளர்ச்சி) நாள்: 13.02.2024.

2.புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செ.மு.ந.க.எண். ப2/4651/2024 (வளர்ச்சி) நாள்: 22.03.2024.

3.தொடர்புடைய ஆவணங்கள்.

-0-

உத்தரவு:-

புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் இளநிலை உதவியாளர்/ ஊர்நல அலுவலர் நிலை-2/காசாளர் மற்றும் தட்டச்சர் பணிநிலையில் பணிபுரியும் பணியர்ள்ர்களுக்கு பார்வை 1இல் காணும் செயல்முறைகளின்படி 01.01.2023ஆம் தேதிய நிலையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திலிருந்து வரப்பெற்ற தகுதியின் அடிப்படையிலான முதுநிலைப்படி திருத்தம் செய்ப்பட்டு இறுதி செய்யப்பட்ட முதுநிலைப் பட்டியல் முதுநிலை எண் 1முதல் 146 வரை வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பார்வை 2-ல் காணும் செயல்முறைகளின்படி 01.01.2024ஆம் ஆண்டிற்கு முதுநிலை எண் 147 முதல் 201 வரை இளநிலை உதவியாளர்/ ஊர்நல அலுவலர் நிலை-2/ காசாளர்/ தட்டச்சர் பணிநிலையில் தற்காலிக முதுநிலைப் பட்டியல் வரைந்து வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 01.01.2024 முதல் 31.12.2024 வரை பணியேற்பு செய்த இளநிலை உதவியாளர்கள்/ ஊர்நல அலுவலர் /காசாளர் பணிநிலையில் (தட்டச்சர்கள் பணியேற்பு செய்யவில்லை) முதுநிலை எண் 202 முதல் 204 வரை 01.01.2025ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த தற்காலிக முதுநிலைப் பட்டியல் வரைந்து வெளியிடப்படுகிறது.

அலுவலகத் தலைவர்கள் இதனை தொடர்புடைய பணியாளர்களுக்கு சார்வு செய்து சார்வு நகலினை உடன் அனுப்பிவைத்திட தெரிவிக்கப்படுகிறது.

-2-

Scanned with OKEN Scanner

இணைப்பில் கண்டுள்ள முதுநிலைப் பட்டியலில் உள்ள பணியாளர்கள் முதுநிலை குறித்து மேல்முறையீடு செய்ய விரும்பினால் இச்செயல்முறைகள் கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள் மேல்முறையீட்டினை உரிய அலுவலர் மூலமாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைத்திட தெரிவிக்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் மேல்முறையீடுகள் ஏதும் வரப்பெறவில்லை எனில் இந்த தற்காலிக பட்டியல் உறுதி செய்து வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: 01.01.2025 நிலையிலான
தற்காலிக முதுநிலைப் பட்டியல்

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி)
புதுக்கோட்டை.

பெறுநர்:

தொடர்புடைய நபர்கள் (உரிய வழியாக)

நகல்: கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள் / தணிக்கை), புதுக்கோட்டை.

நகல்: மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) புதுக்கோட்டை.

நகல்: அனைத்து வட்டாரவளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ)கள்,
புதுக்கோட்டை மாவட்டம்.

நகல்: பி3 பிரிவிற்கு.

Scanned with OKEN Scanner

இணைப்பு

ந.க.ப2/0316/2025 (வளர்ச்சி)
நாள்: 20 .01.2025

மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி)
புதுக்கோட்டை

01.01.2025ஆம் தேதிய நிலையில் இளநிலை உதவியாளர்/ ஊர்நல அலுவலர் நிலை-2/ காசாளர்/ தட்டச்சர் பணிநிலைக்கான தற்காலிக ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டியல்

| வ. எண் | முதுநிலை எண் | பெயர்/பதவி/ அலுவலகம் | பணி நியமனம் | பணியில் சேர்ந்த நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 202 | ஆர்.பழனிவேல், இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், மணமேல்குடி. | 20% பதவி உயர்வு | 16.07.2024 மு.ப. | -- |
| 2 | 203 | வி.முருகையா, இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், ஆவுடையார்கோவில். | 20% பதவி உயர்வு | 16.07.2024 மு.ப. | -- |
| 3 | 204 | கே.பாண்டிக்குமார், இளநிலை உதவியாளர், உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம், புதுக்கோட்டை | 10% பதவி உயர்வு | 10.08.2024 மு.ப. | -- |

190/2025/அ1
27.01.2025

ஊராட்சி ஒன்றியம்,
ஆவுடையார்கோவில்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி)
புதுக்கோட்டை.

நகல் தொடர்புடையவருக்கு
சார்வு செய்யப்படுகிறது.

பெறுநர்

1. திரு. வி. முருகையா,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
ஆவுடையார்கோவில்.

வட்டார வளர்ச்சி அலுவலர்
(வட்டார ஊராட்சி)
ஊராட்சி ஒன்றியம். ஆவுடையார்கோவில்
27.01.25

Scanned with OKEN Scanner